LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

U.G. DEGREE EXAMINATION – **LANGUAGES**

FIRST SEMESTER – **APRIL 2023**

UTL 1102 – TAMIL - I

Date: 11-05-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00 PM - 04:00 PM

பகுதி – அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)

விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

1. கடல் குடித்த குடமுனிஉன் கரைகாணக் குருநாடில்-விளக்கம் தருக
2. ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே-நீ
   ஏன் படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே--இடம் சுட்டுக
3. சின்ன மலர்கூட இப்போது செடியில் இல்லை!இடம் சுட்டிப்பொருள் விளக்குக.
4. தடித்தஓர் மகனைத் தந்தை ஈண்டடித்தால்-இடம் சுட்டுக
5. தீட்டுவோன் இன்றி யாமோ சித்திரந் திகழ்பொற்பாவை—விளக்கம் தருக.
6. கன்னல் முத்தம் கழனியிற் சிந்தும்-பாடலின் விளக்கம் தருக.
7. உரைநடை ஆசிரியர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக
8. மாயூரம் வேதநாயகர் எழுதிய நூல்களில் இரண்டு ----------/----------
9. அ(கட்டி+ போட்டான் = ---------- /ஆ(வெட்டி+பேச்சு = ----------
10. கலப்பு நடையை நீக்கி எழுதுக.
    அ(ஒரு கப் டீ கொடு = ----------
    ஆ(வெல்டன் எல்லாம் கரெக்ட் ஆன்சர்ஸ்.= ----------

பகுதி – ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க

11. பேராசிரியர் பெ.சுந்தரனாரின் தமிழ்த் தெய்வ வணக்கம் பாடலை விளக்குக.
12. 'சிறுத்தையே வெளியில் வா' என்ற பாடலில் பாரதிதாசன் கூறும் செறிவான கருத்துகளை விளக்கியுரைக்க
13. கவிஞர் வைரமுத்து பிற்சேர்க்கை கவிதையின் வழி எடுத்துரைக்கும் கருத்துகளை விவரி.
14. மூதுரை வழி ஔவையார் கூறும் நீதிக்கருத்துகளை விரித்துரைக்க
15. புது வாத்தியார் கதையின் மூலம் ஆசிரியர் மாணவர் உறவின்–ன்மையை விளக்கியுரைக்க
16. ஹைக்கூ கவிதை என்றால் என்ன? சான்றுடன் தெளிவுபடுத்துக
17. மேனாட்டுத் தமிழ் அறிஞர்கள் எவரேனும் நால்வர் குறித்து ஆய்ந்துரைக்க

பகுதி – இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)

மூன்று பக்க அளவில் விடையளிக்க.

18. பாரதியாரின் பாரததேசம் கவிதை வெளிப்படுத்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

    (அல்லது)

    முத்தொள்ளாயிரம் குறிப்பிடும் சேர,சோழ,பாண்டிய மன்னர்களின் சிறப்புகளைப் பதிவிடுக

19. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

    (அல்லது)

    சிற்றிலக்கியங்கள் குறித்து நீவிர் அறிந்தனவற்றைப் பதிவு செய்க.

20. 'இளைப்பாறும் சுமைகள்' எனும் சிறுகதையின் கதைமாந்தர்களது பண்பு நலன்களை ஆய்வு செய்க.

    (அல்லது)

    'வலம்புரிச்சங்கு' சிறுகதையின் மூலம் வெளிப்படும் சமூக ஏற்றத் தாழ்வு நிலையை மதிப்பீடு செய்க.

&&&&&&&&&&